டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 2.04.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 235 - Madurai | Online Edition

# தமிழகத்தில் வெப்ப அலை நீடிக்கும்! இந்திய வானிலை மையம் கணிப்பு!!

புது தில்லி, ஏப்.2

நாளுக்கு நாள் படிப்படியாக வெப்பம் அதிகரித்து வரும் நிலையில் தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் ஏப்ரல் மாதத்தில் வெப்ப அலை வீசும் நாட்கள் அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்து உள்ளது. ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்தியாவின் பெரும்பான்மையான பகுதிகளில் வெப்ப அலை நாட்களின் எண்ணிக்கை இயல்பைவிட அதிகமாக இருக்கும். இந்த ஏப்ரலில் ஒடிசா, மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி, ஆந்திராவில் வெப்ப அலை நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று IMD-ன் சமீபத்திய அறிக்கை கூறுகிறது.

மேலும் எல்நினோ தாக்கம் காரணமாக தென்மேற்கு பருவ மழை உருவாவதிலும் தாமதம் ஏற்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய வானிலை ஆய்வு மையம் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தமிழகம் முழுவதும் ஏப்ரல் - ஜூன் மாதம் வரை அதிகபட்ச வெப்ப நிலையானது இயல்பான அளவை விட சற்று அதிகமாகவே இருக்கும். மேலும் குறைந்த பட்ச வெப்பநிலையும் அதிகரித்தே காணப்படும் ன்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கடற்கரையோர மாவட்டங்களில் தீவிர வெப்ப அலை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என கூறப்பட்டு உள்ளது. குறிப்பாக வரும் 10-ஆம் தேதியில் இருந்து கடலோர வடக்கு தமிழ்நாடு, வடகடலோர மாவட்டங்களில் வெப்ப அலை அதிகமாக இருக்கும். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர் உள்ளிட்ட வடமாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கும். இந்த மாதம் வழக்கத்தை விட அதிக வெப்பமானதாக இருக்கும்.

# அரியலூர் வட்டாரத்தில் வேளாண்மை கிடங்கு ஆய்வு

அரியலூர், ஏப்.2



அரியலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனியின் அறிவுரைப்படி, வேளாண்மை உதவி இயக்குனர் தர கட்டுப்பாடு அக்ரி டாக்டர் த.ராதா கிருஷ்ணன் நேற்று (1.4.26) ஆய்வு செய்தார். ஆய்வின் போது கிடங்கு மேலாளர் ஜெயராஜ் மற்றும் உதவி விதை அலுவலர் பாரி ஆகியோர் உடன் இருந்தனர். வேளாண்மை கிடங்கில் உயிர் உரங்கள் அசோஸ்பைரிலும், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஸ் பாக்டீரியா, துத்தநாக பாக்டீரியா மற்றும் நுண்ணூட்ட உரங்கள் நிலக்கடலை பயிர், சிறுதானிய பயிர், எண்ணெய் வித்துக்கள் பயிர், கரும்பு பயிர், போன்ற பயிர்களுக்காக தனித்தனியாக நுண்ணூட்ட உரங்கள் போதுமானளவில் உள்ளது மற்றும் வம்பன் பத்து உளுந்து உள்ளது.



விவசாயிகள் இதை பயன்படுத்த வேண்டும். உயிர் உரங்களை பயன்படுத்துவதால் மண்ணின் வளத்தை அதிகப் படுத்தி சாகுபடி செலவை குறைத்து, சாகுபடி பண்ணும் பயிரிலிருந்து மகசூல் அதிகப்படுத்தலாம், பயிருக்கு ஏற்ற வகையில் நுண்ணூட்ட உரங்களை பயன்படுத்துவதால், பயிருக்கு தேவையான நுண்ணூட்ட சத்துக்கள் கிடைப்பதுடன், பயிரின் மகசூல் மிக அதிக பெறுவதோடு அல்லாமல், பயன்படுத்தப்படும் உரம் அளவை குறைப்பது மட்டுமில்லாமல் மண்ணின் வளம் அதிகப் படுத்தி, அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரகட்டுப்பாடு அக்ரி டாக்டர் த. ராதாகிருஷ்ணன் கூறினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஏப்.1

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதன்படி இம்மாதத்திற்கான பயிற்சி 06.04.2026 திங்கட்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/- நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர் களுக்கு ரூ.590/- நபர் (அடையாள சான்று அவசியம்).

பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப் படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422 - 6611336, 6611226, 96294 96555, 63792 98064, 93618 89846, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

*நேற்றைய தொடர்ச்சி...*

### 3. உணவியல் நிபுணர்கள் மற்றும் ஆய்வாளர்களின் அலசல்

உணவியல் வல்லுநர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அடுப்பில்லா சமையலை 'ஒருங்கிணைந்த உணவு முறை' என்று பரிந்துரைக்கின்றனர்.

**சாதகமான கருத்துக்கள் (Pros)**

**நுண்ணூட்டச்சத்துக்கள் :** வேகவைக்கப்படாத உணவுகளில் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் (Antioxidants) அதிகமாக இருக்கும். இது உடலில் உள்ள ஆக்சிஜனேற்ற அழுத்தத்தைக் (Oxidative stress) குறைக்கிறது.

**குடல் ஆரோக்கியம் :** முளைகட்டிய தானியங்கள், ஊறவைத்த பருப்பு வகைகள் குடலுக்குத் தேவையான நல்ல பாக்டீரியாக்களை ஊக்குவிக்கின்றன.

**சுவை மற்றும் பக்குவம் :** எலுமிச்சை சாறு, கல்உப்பு, தேங்காய் பால் மற்றும் தேன் ஆகியவற்றைப் பயன்படுத்தியவை, வேக வைத்த உணவுகளுக்கு நிகரான சுவையை அடுப்பில்லா சமையலிலும் கொண்டு வர முடியும் என ஆய்வுகள் மற்றும் சோதனை முயற்சிகள் காட்டுகின்றன.

**எச்சரிக்கை மற்றும் ஆய்வுகளின் வரம்பு (Cons/Caution)**

**எல்லா உணவும் பொருந்தாது :** சில உணவுகளை (உதாரணமாக : தக்காளி, காளான், சில வகை தானியங்கள்) சமைக்கும் போது தான் அதிலுள்ள சில சத்துக்கள் உடலுக்கு முழுமையாகக் கிடைக்கும் (உதாரணமாக : தக்காளியில் உள்ள லைகோபின்).

**ஊட்டச்சத்து குறைபாடு :** புரதம் (Protein) மற்றும் சில வைட்டமின்கள் (B12, D) போன்றவற்றை முழுமையாகப் பெற, அடுப்பில்லா சமையலை மட்டும் சார்ந்திருக்காமல், சமச்சீரான உணவு முறையைத் திட்டமிட வேண்டும்.

**பாதுகாப்பு :** அசைவ உணவுகள் மற்றும் சில வகை காய்கறிகளை பச்சையாக உண்பது பாக்டீரியா தொற்றுக்கு வழி வகுக்கும். எனவே, சரியான சுத்தம் (Cleaning) மற்றும் பதப்படுத்துதல் மிக முக்கியம்.

பொதுவாக அடுப்பில்லா சமையல் என்பது நம் அன்றாட உணவில் ஒரு பகுதியைச் சேர்க்க வேண்டிய மிகச்சிறந்த ஆரோக்கியப் பழக்கம். குறிப்பாக காலை உணவாகவோ அல்லது இரவு உணவின் ஒரு பகுதியாகவோ இதனை மாற்றிக்கொள்வது உடலுக்குப் புத்துணர்ச்சி தரும்.

**குறிப்பு :** நீங்கள் திடீரென முழுமையாக அடுப்பில்லா சமையலுக்கு மாறுவதற்கு முன், உங்கள் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, ஒரு ஊட்டச்சத்து நிபுணரின் ஆலோ சனையைப் பெறுவது நல்லது.

**1. முளைகட்டிய தானிய சாலட்**

முளைகட்டிய தானிய சாலட் என்பது (Sprouted Grain Salad) புரதச்சத்து மற்றும் தாதுக்கள் நிறைந்த ஒரு முழுமையான இயற்கை உணவாகும்.

**இதன் செய்முறை மற்றும் இதர விபரங்களை கீழே விரிவாகக் காணலாம் :**

**1. தேவையான பொருட்கள்**

**முளைகட்டிய தானியங்கள் :** 1 கப் (பச்சைப்பயறு, கொண்டைக் கடலை அல்லது தட்டப்பயறு - இதில் பச்சைப்பயறு எளிதில் செரிமானமாகும்).

**காய்கறிகள் :** பொடியாக நறுக்கிய வெங்காயம் (1), தக்காளி (1), துருவிய கேரட் (பாதி), சிறிய துண்டு வெள்ளரிக்காய்.

**காரத்திற்கு :** 1 பச்சை மிளகாய் (பொடியாக நறுக்கியது) அல்லது அரை ஸ்பூன் மிளகுத்தூள்.

**சுவைக்கு :** தேவையான அளவு இந்துப்பு (யூலிஉவ நீழியிமி) அல்லது சாதாரண உப்பு.

**புத்துணர்ச்சிக்கு :** சிறிதளவு எலுமிச்சை சாறு மற்றும் நறுக்கிய மல்லித்தழை.

கூடுதல் சுவைக்கு (விருப்பப்பட்டால்) : துருவிய தேங்காய் அல்லது வறுத்த வேர்க்கடலை.

தொகுப்பு : *G. சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**

# மாட்டு சந்தையில் ரூ.5 கோடிக்கு ஏல வர்த்தகம்

கோயம்புத்தூர், ஏப்.2

கோவை மாவட்டம், பொள்ளாச்சி மாட்டு சந்தைக்கு நேற்று முன்தினம் (மார்ச் 31) மாடுகள் வரத்து அதிகரித்து காணப்பட்டது. ஒரே நாளில் ரூ.5 கோடிக்கு வர்த்தகம் நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் மாட்டு சந்தை செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் நடப்பது வழக்கம். இச்சந்தைக்கு பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதி, வெளிமாவட்டங்கள், வெளி மாநிலங்களிலிருந்தும் மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. இதனை பெரும்பாலும் கேரள வியாபாரிகளே ஏல முறையில் வாங்கி செல்கின்றனர்.

இதில், ரம்ஜான் பண்டிகையின்போது, மாடு விற்பனை விறுவிறுப்புடன் இருந்தது. அதன்பின் கடந்த வாரம் மாடுகள் விற்பனை மந்தமானது.

இந்நிலையில், வரும் 5ம் தேதி ஈஸ்டர் பண்டிகை என்பதால், இதையொட்டி செவ்வாய்க்கிழமை நடந்த மாட்டு சந்தைக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், வெளி மாநிலத்திலிருந்தும் மாடுகள் வரத்து வழக்கத்தைவிட அதிகமாக இருந்தது. இதில், குறிப்பாக பல வாரங்களுக்கு பிறகு கர்நாடகா மற்றும் ஆந்திரா மாநில பகுதியிலிருந்து விவசாயிகள் மாடு களை கொண்டு வந்திருந்தனர். சந்தைக்கு சுமார் 3000க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டிருந்தன.

இதேபோல், கேரள வியாபாரிகளும் பலர் வந்திருந்தனர். இதன் காரணமாக மாடுகள் கூடுதல் விலைக்கு விற்னையானது. இதில், ஆந்திர மாநில 500 கிலோ எடை கொண்ட ஒரு மாடு ரூ.1.65 லட்சம் வரை விலை போனது. நாட்டு காளை மாடு ரூ.48 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரையிலும், பசுமாடு ரூ.45 ஆயிரம் வரையிலும், எருமைமாடு ரூ.65 ஆயிரத்துக்கும், கன்று குட்டிகள் ரூ.18 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை என கூடுதல் விலைக்கு விற்பனையானது. இந்நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் ரூ.5 கோடி வரை வர்த்தகம் நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர் வரத்து அதிகரிப்பு

தர்மபுரி, ஏப்.2

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையால் கர்நாடக அணைகளில் உபரிநீர் திறப்பு அதிகரித்துள்ளது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர் வரத்து விநாடிக்கு 4000 கன அடியாக அதிகரித்துள்ளது. நேற்று நீர் வரத்து விநாடிக்கு 1500 அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.



# தரமான விதை சேமிப்பிற்கான பரிசோதனை முறைகள்

தரமான விதையானது, இந்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட விதைச்சான்றளிப்பு தரத்திற்கு ஏற்ற குறைந்தபட்ச முளைப்புத் திறன், இனத்தூய்மை, புறத்தூய்மை, நிர்ணயிக்கப்பட்ட ஈரப்பதம் மற்றும் விதை நலத்துடன் கூடிய வீரியமும் கொண்டிருக்க வேண்டும்.

**விதை சேமிப்பிற்கு முன் கையாள வேண்டிய முறைகள்**

● வயலிலேயே விதைகளைத் தாக்கும் பூச்சிகளான பயறு வண்டு, நெல் அந்துப்பூச்சி மற்றும் அரிசிக் கூன்வண்டு போன்ற பூச்சிகளைக் கட்டுப்படுத்த பால்பிடிக்கும் சமயத்தில் மாலத்தியான் 50 ஈசி பூச்சிக் கொல்லியை 0.5 சதம் என்ற அளவில் தெளிக்கலாம்.

● கதிர் அடிக்கும் களங்கள், விதை சேமிப்பு அறைகளுக்கு மிக அருகாமையில் இருக்காமல் பார்த்துக் கொள்வதோடு, சிதறிய விதைகளை உடனடியாக சுத்தம் செய்து அப்புறப்படுத்த வேண்டும்.

● அறுவடைக்குப்பின் விதைகளை நன்றாக உலர்த்தி, ஈரப்பதத்தை 8 – 10 சதவிகிதம் அளவிற்கு குறைக்க வேண்டும்.

● நன்கு சுத்தம் செய்யப்பட்டு கல், தூசி நீக்கிய விதைகளை புதிய சாக்குப் பைகளில் சேமிக்க வேண்டும்.

● விதை சேமிப்புக் கிடங்குளில் சேமிக்கப்பட ஹிவ்வணடிய விதைகள் மிகுந்த முளைப்புத்திறன் மற்றும் வீரியமிக்கவை-யாகவும், பூச்சி மற்றும் பூஞ்சாண நோய்த் தாக்குதல் இல்லாத விதைகளாகவும் இருத்தல் வேண்டும்.

● விதை சேமிப்பிற்குப் பயன்படுத்தப்படும் சாக்குகள் புதியதாக அல்லது பூச்சியற்றதாக இருக்கவேண்டும். பழைய சாக்குகளை மாலத்தியான் அல்லது டைகுளோர்வாஸ் 0.1 சத கரைசலில் நனைத்து, உலர்த்தியப் பின் விதைகளை சேமிக்கப் பயன் படுத்தலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

## விதை சேமிப்புக் கிடங்கு பராமரிப்பு

● விதை சேமிப்புக்கிடங்கு மற்றும் அதன் சுற்றுப்புறம், பூச்சிகள் மற்றும் எலிகள் நடமாட்டம் இல்லாத இடமாக இருத்தல் வேண்டும்.

● விதை சேமிப்புக் கிடங்கினைச் சுற்றி ஏதாவது பொந்துகள் இருந்தால் அவற்றை அடைத்து விடவேண்டும். இல்லையெனில் எலிகள் கிடங்கினுள் வருவதற்கு வாய்ப்பு நேரிடுகின்றன.

● மேலும், கிடங்கின் படிக்கட்டுகள் 5 அடி தள்ளி அமைக்க வேண்டும். தேவைப்படும் போது இடையில் பலகை போட்டு உள்ளே செல்லலாம். சில கிடங்குளில் நகரும் படிக்கட்டுகளை அமைத்து தேவையில்லாத போது தள்ளி வைத்துவிடலாம். கிடங்கிலிருந்து படிக்கட்டுகளை தள்ளி அமைப்பதால் எலிகள் உட்செல்ல முடியாது.

● சேமிப்புக் கிடங்கின் சுவர்களில் காணப்படும் கீறல்களில் பூச்சிகள் வாழும். அவற்றை அழிக்க மூன்று மாதத்திற்கு ஒரு முறை லிட்டருக்கு 3 மில்லி 50 சத மாலத்தியான் திரவ மருந்து தெளிக்கவேண்டும். வருடம் ஒரு முறை வெள்ளை அடிக்க வேண்டும்.

● விதை சேமிப்புக் கிடங்கின் தட்ப வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் போதிய அளவு பாதுகாக்கப்பட வேண்டும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



● விதை மூட்டைகளை அடுக்கும்போது அவற்றை 6 – 8 மூட்டைகளுக்கு மேல் ஒரே அடுக்கில் அடுக்கக் கூடாது. அதற்கு மேல் அடுக்கும் பொழுது அடியிலுள்ள மூட்டைகளின் விதைகள் அழுத்தம் காரணமாக பாதிப்படைய வாய்ப்புள்ளது.

● விதைகளை அடுக்கும் பொழுது சுவற்றினை ஒட்டி அடுக்காமல் குறைந்தது 3 அடி தள்ளி அடுக்கவேண்டும். அவ்வாறு செய்யும் பொழுது விதைகள் சுவற்றிலிருந்து ஈரத்தினை உறிஞ்சாமல் பாதுகாக்க முடியும்.

● விதை சேமிப்பில் இருக்கும் போது பூச்சித் தாக்குதல் காணப்பட்டால் ஒரு கிலோ விதைக்கு 0.5 — 1.0 சதம் என்ற அளவில் மாலத்தியான் 50 சத மருந்து (லிட்டருக்கு 10 மில்லி) அல்லது டைகுளோர்வாஸ் 76 சதம் ஈசி (லிட்டருக்கு 7 மில்லி) கரைசலை விதைக் கிடங்கில் தெளிக்கலாம் (நூறு சதுர மீட்டருக்கு 5 லிட்டர் தெளி திரவம்).

● மருந்துகளைத் தெளிக்கும்பொழுது நேரிடையாக மூட்டை களின் மீது தெளிப்பதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், மூட்டை குகளின் மீது தெளிக்கும் பொழுது விதைகள் ஈரத்தினை உறிஞ்சி அவற்றின் முளைப்புத்திறன் பாதிப்படைய வாய்ப்பு உள்ளது.

எனவே, மூட்டையின் மீதுள்ள பூச்சிகளைக் களைத்து மருந்தினை மூட்டை வரிசைகளுக்கடையேயும், சுவற்றின்மீது அமர்ந்துள்ள பூச்சிகளின் மீதும் தெளிக்க வேண்டும். அவ்வாறு சேமித்து வைத்துள்ள விதைகளில் ஈரப்பதம், புறத்தூய்மை பரிசோதனை, முளைப்புத்திறன் பரிசோதனை செய்து அதற் கேற்றவாறு விதை சேமிப்பு முறைகளில் கவனம் செலுத்துவது அவசியம்.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தியாளர்கள், விதை விநியோகம் செய்பவர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் விதையின் ஈரப்பதம், புறத்தூய்மை பரிசோதனை, முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ள ரூ.80/– கட்டணத்துடன் விதை பரிசோதனை நிலையம், பெரியமில் தெரு, விஜயபுரம், திருவாரூர் என்ற முகவரியில் அணுகி பயன்பெற அழைக்கப்படுகிறார்கள். மேற்கண்ட இந்த தகவல் திருவாரூர் மாவட்டத்திற்கான தஞ்சை சரக விதைப் பரிசோதனை அலுவலர், து.சிவவீரபாண்டியன், திருவாரூர், விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் கா.புவனேஸ்வரி மற்றும் வேளாண்மை அலுவலர் ரா.அனந்த குமார் ஆகியோர் தெரிவித்துள்ளார்கள்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விறகு அடுப்பில் சமைப்பதால் கிடைக்கும் நன்மைகள்?



சமீப காலமாக ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் நடத்தி வரும் போர் காரணமாக கியாஸ் (GAS) வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் வணிக சிலிண்டர்கள் தட்டுபாடு நிலவுவதால் நம்முடைய நாட்டில் ஓட்டங்கள், டீக்கடை மற்றும் முக்கிய உணவு விடுதிகளில் இன்னும் ஓரிரு வாரத்தில் மட்டுமே சிலிண்டர்கள் பயன் பாட்டில் இருப்பதாகவும், இதே நிலை தொடர்ந்து நீடித்தால் ஓட்டல்கள் மூடப்படும் அபாயம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த சூழலில் சிலிண்டருக்கு மாற்றாக விறகு அடுப்பில் சமைப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விரிவாக பார்பபோம்.

**விறகு அடுப்பு :** கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் வரை சிலிண்டர் (எரிவாயு - GAS CYLINDERS) உபயோகம் பட்டி தொட்டிகளில் வரவில்லை. அனைத்து வீடுகளிலும் விறகு அடுப்பு சமையல் தான். இதற்காக ஒவ்வொரு வீடுகளிலும் விறகு படப்பு (வைக்கோல் போர்) மாதிரி அவரவர் நிலங்களில் விளைந்த விளைப்பொருள்களின் தட்டை மார்கள் (பருத்தி மார், துவரை மார், மஞ்சணத்தி மார், சீமைக்கருவேல் குச்சிகள்) வைத்து தான் சமையலுக்கு எரிபொருளாக பயன் படுத்தினார்கள்.

காலப்போக்கில் படிப்படியாக சிலிண்டர்கள் பயன்பாட்டிற்கு வந்தவுடன் விறகு அடுப்பை மறந்தனர். தற்போது அதனை பயன்படுத்த தயாராக உள்ளனர்.

**சிலிண்டர் தட்டுபாட்டால் விறகு அடுப்பில் சமைப்பதால் உண்டாகும் நன்மைகள்?**

**1) கூடுதல் சுவை மற்றும் மணம்**

விறகு எரியும் போது வெளிவரக்கூடிய லேசான புகை கரி, சமைக்கும் உணவிற்கும் சுவையும் வாசனையும் (SMOKY FLAVOR) சேர்க்கிறது. குறிப்பாக மண் பானைகளில் சமைப் பதில் இந்த சுவை தனித்துவமாக இருக்கும்.

**2) சத்துகளுக்கு பாதுகாப்பு**

விறகு அடுப்பில் ஒரே சீராகவும் மெதுவாக பரவுதால் காய்கறிகள், பருப்பு வகைகளில் உள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் சிதையாமல் பாதுகாக்கப்படுகிறது. குறிப் பாக அதிக வெப்பத்தால் அழியக்கூடிய வைட்டமின் சி போன்ற சத்துகள் இதில் நன்றாக தக்க வைப்படுகிறதாக தரவுகள் கூறுகின்றன.

**3) உடல் ஆரோக்கியம்**

விறகு அடுப்பு சமையல் மெதுவாக (SLOW COOKING PROCESS), நடப்பதால் உணவுகள் நன்றாக வெந்து சாப்பிடுவதால் எளிதாக செரிமானமாகும், வயறு உபாதைகள் குறையும்.

**4) பொருளாதார சிக்கனம்**

சிலிண்டர்களின் விலையில் கால் பங்கு விலையில் விறகு வாங்கலாம். கிராமப்புறங்களில் இலவசமாக கிடைக்கும் குச்சி, முள் போன்றவற்றை விறகாக பயன்படுத்தலாம்.

**5) சுற்றுப்புற சூழல் நட்பு**

விறகு ஒரு புதுப்பிக்க தக்க எரிசக்தி, (RENEWABLE ENERGY SOURCES). நன்றாக காய்ந்த உலர்ந்த விறகுகளை பயன்படுத்துவது அதிகளவு பாதிப்பை சுற்றுப்புற சூழலுக்கு ஏற்படுத்தாது.

**6) நீண்ட நேரம் சமைத்த உணவு சூடாக இருக்கும்**

விறகு அடுப்பில் சமைத்த பின் அடுப்பில் உள்ள தணல் நீண்ட நேரம் பாத்திரத்தில் உள்ள உணவு சூடாகவும் கெட்டு போகாமல் இருக்கும். அடுப்பு அணைந்த பிறகும் கூட சூடாக இருக்கும்.

## விறகு அடுப்பில் சமைப்பதால் ஏற்படும் தீமைகள்?

விறகு அடுப்பில் வெளிவரக்கூடிய புகையை சரியான புகை போக்கி வைக்காமல் இருந்தால் சமைப்பவர்களுக்கு ஆஸ்துமா நோய் மற்றும் சுவாச கோளாறு ஏற்படும். சிலிண்டர்கள் போல விரைவாக சமைக்க முடியாது. இதில் வெப்பத்தை கூட்டவோ, குறைக்கவோ முடியாது.

என்ன எரிபொருள் தட்டுபாட்டை தவிர்க்க விறகு அடுப்பை பயன்படுத்தலாமே. என்ன நீங்க ரெடியா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மேற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் மற்றும் அதைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த அண்மை தகவல்கள்

புது தில்லி, ஏப்.1

மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றத்தை அடுத்து, மத்திய அரசு முக்கியத் துறைகளில் நிலைத்தன்மையைப் பேணுவதற்காக ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை முனைப்புடன் மேற் கொண்டு வருகிறது. தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்தல், கடல்சார் நடவடிக்கைகளைப் பாதுகாத்தல், அப்பகுதியில் உள்ள இந்திய மக்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குதல் ஆகியவற்றில் முயற்சிகள் தொடர்ந்து கவனம் செலுத்துகின்றன.

இந்த முயற்சிகளின் தற்போதைய நிலை தொடர்பான சில முக்கியத் தகவல்கள் :

● ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, நாடு முழுவதும் பெட்ரோலியப் பொருட்கள், எல்பிஜி தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

● அனைத்து சுத்திகரிப்பு நிலையங்களும் அதிகத் திறனில் இயங்கி வருகின்றன. மேலும் போதுமான கச்சா எண்ணெய் இருப்பும் உள்ளது. நாடு போதுமான பெட்ரோல், டீசல் இருப்பையும் பராமரித்து வருகிறது.

● உள்நாட்டு நுகர்வுக்கு ஆதரவளிக்கும் வகையில், சுத்திகரிப்பு நிலையங்களில் உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

● நாடு முழுவதும் அனைத்து சில்லறை விற்பனை நிலையங் களும் வழக்கம் போல் இயங்கி வருகின்றன.

● மத்திய கிழக்கு நெருக்கடியின் விளைவாக சர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் விலைகளில் அசாதாரணமான உயர்வு ஏற்பட்டுள்ளது. இத்தாக்கத்திலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் பொருட்டு, மத்திய அரசு பெட்ரோல், டீசல் மீதான கலால் வரியை லிட்டருக்கு ரூ.10 குறைப்பதன் மூலம், இந்தச் சுமையின் ஒரு பகுதியைத் தானே ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.

● உள்நாட்டுச் சந்தையில் இந்தப் பொருட்களின் இருப்பை உறுதி செய்வதற்காக, மத்திய அரசு டீசல் மீது லிட்டருக்கு ரூ.21.5, விமான டர்பைன் எரிபொருள் (ATF) மீது லிட்டருக்கு ரூ.29.5 ஏற்றுமதி வரியை விதித்துள்ளது.

● வதந்திகளை நம்ப வேண்டாம் என்ற அறிவுரையை அரசு மீண்டும் வலியுறுத்துகிறது. வதந்திகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, செய்தியாளர் சந்திப்புகள் மூலம் சரியான தகவல் களைப் பரப்புமாறு மாநில அரசுகளும் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளன.

● நுகர்வோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, டி-பிஎன்ஜி, சிஎன்ஜி-போக்குவரத்துக்கான விநியோகம் 100% மேற் கொள்ளப்பட்டுள்ளது.

● வணிக ரீதியான எல்.பி.ஜி கிடைப்பது குறித்த கவலைகளைத் தீர்க்கும் வகையில், நகர எரிவாயு விநியோக (CGD) அமைப் புகள் தங்களின் அனைத்து புவியியல் பகுதிகளிலும் உள்ள உணவகங்கள், தங்கும் விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள் போன்ற வணிக நிறுவனங்களுக்கு பிஎன்ஜி இணைப்புகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய அரசால் அறிவுறுத்தப் பட்டுள்ளன.

● சிஜிடி கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்குத் தேவையான விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிப்பதை விரைவுபடுத்து மாறு, மத்திய அரசு, மாநில/யூனியன் பிரதேச அரசுகளையும், அமைச்சகங்களையும் கேட்டுக்கொண்டுள்ளது.

● மார்ச் மாதத்தில், வீட்டு உபயோகம், வணிகம், விடுதி, உணவகம், சிற்றுண்டிச்சாலை உள்ளிட்ட 3.1 லட்சத்திற்கும் மேற் பட்ட இணைப்புகளுக்கு எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றுடன் கூடுதலாக, 2.7 லட்சத்திற்கும் மேற்பட்ட புதிய இணைப்புகள் வழங்கப்பட்டு, அவற்றுக்கு எரிவாயு இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

● அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கும் வழக்கமான ஒதுக்கீட்டிற்கு கூடுதலாக 48,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

● மத்திய அரசு, 27.03.26 தேதியிட்ட கடிதம் மூலம், சரியான தகவல்களைப் பரப்புவதற்கும் வதந்திகளை ஒழிப்பதற்கும், அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்களை தினசரி செய்தியாளர் சந்திப்புகளை நடத்தவும், சமூக ஊடகங்கள்/மின்னணு ஊடகங்களில் சரியான தகவல் களையும் வெளியிடவும் மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளது.

● தற்போது, ஆந்திரப் பிரதேசம், பீகார், குஜராத், இமாச்சலப் பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, மேகாலயா, நாகாலாந்து, ஒடிசா, ராஜஸ்தான், தெலங்கானா, உத்தரப் பிரதேசம், உத்தரகாண்ட், தமிழ்நாடு, அருணாச்சலப் பிரதேசம் ஆகிய 16 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் பத்திரிகையாளர் சந்திப்புகளை நடத்தி வருகின்றன.

● பல மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் எல்பிஜி பதுக்கல், கள்ளச்சந்தையைக் கட்டுப்படுத்த சோதனைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதுவரை 3000–க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு, நேற்று 500–க்கும் மேற்பட்ட சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

● தடையற்ற விநியோகத்தை உறுதி செய்வதற்கும், பதுக்கல்/ கள்ளச்சந்தை வழக்குகளைக் கண்டறிவதற்கும், பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்களின் அதிகாரிகள், நாடு முழுவதும் திடீர் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

● மேற்கு ஆசியப் பகுதியில் இயங்கும் இந்தியக் கப்பல்கள், மாலுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகத் தேவை யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் துறை முகங்கள், கப்பல் போக்குவரத்து, நீர்வழிகள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

● அப்பகுதியில் உள்ள அனைத்து இந்திய மாலுமிகளும் பாது காப்பாக உள்ளனர். கடந்த 24 மணி நேரத்தில் இந்தியக் கொடி ஏந்திய கப்பல்கள் சம்பந்தப்பட்ட எந்த அசம்பாவிதமும் பதிவாக வில்லை.

● 485 இந்திய மாலுமிகளுடன் கூடிய 18 இந்தியக் கப்பல்கள் மேற்கு பாரசீக வளைகுடாப் பகுதியில் நிலை கொண்டுள்ளன. கப்பல் போக்குவரத்து தலைமை இயக்குநரகம் நிலைமையைத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

● கப்பல் போக்குவரத்து இயக்குநரக கட்டுப்பாட்டு அறை 24 மணி நேரமும் தொடர்ந்து இயங்கி வருகிறது. இது செயல்படுத்தப்பட்டதி லிருந்து 4699 அழைப்புகளையும் 9364 மின்னஞ்சல்களையும் கையாண்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 144 அழைப்புகளும் 290 மின்னஞ்சல்களும் பெறப்பட்டுள்ளன.

● கடந்த 24 மணி நேரத்தில் 9 பேர் உட்பட, இதுவரை 959–க்கும் மேற்பட்ட இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக தாயகம் திரும்புவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

● இந்தியா முழுவதும் துறைமுகச் செயல்பாடுகள் இயல்பாக உள்ளன. மாலுமிகளின் நலனையும், தடையற்ற கடல்சார் செயல் பாடுகளையும் உறுதி செய்வதற்காக, கப்பல் போக்குவரத்து அமைச்சக

மானது, வெளியுறவு அமைச்சகம், இந்தியத் தூதரகங்கள், கடல்சார் துறையினருடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

● மேற்கு ஆசியப் பகுதியில் உள்ள இந்திய சமூகத்தினருடன் தொடர்ந்து தகவல் தொடர்பு பேணப்பட்டு வருகிறது. அவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்விற்காகத் தேவையான உதவிகளும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

● மேற்கு ஆசியப் பகுதி முழுவதும் உள்ள தூதரகங்களும் அலுவலகங்களும் இரவு-பகல் பாராமல் இயங்கி வருகின்றன. அவை 24 மணி நேரமும் செயல்படும் உதவி எண்களை இயக்குவதோடு, இந்திய சமூகம், சங்கங்கள், அமைப்புகள், நிறுவனங்களுடன் தகவல் தொடர்பிலும் இருந்து வருகின்றன. புதுப்பிக்கப்பட்ட அறிவுரைகள், தகவல்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

● இந்திய தூதரகங்கள் உள்ளூர் அரசுகளுடன் நெருங்கிய தொடர்பில் இருப்பதோடு, மாலுமிகள், மாணவர்கள், இந்திய மக்களுக்கு விசா ஏற்பாடுகள், தூதரக சேவைகள், பிற ஆதரவு ஆகியவற்றைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன.


● 2026 பிப்ரவரி 28 முதல், இப்பகுதியிலிருந்து சுமார் 5,72,000 பயணிகள் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர்.

● ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து குறைந்த எண்ணிக்கையிலான திட்டமிடப்படாத விமானங்கள் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. ஓமன் மற்றும் சவூதி அரேபியாவிலிருந்து இந்தியாவிற்கு விமானங்கள் தொடர்ந்து இயங்குகின்றன.

● கத்தார் வான்வெளி பகுதியளவு திறக்கப்பட்டுள்ளதால், இன்று இந்தியாவிற்கு சுமார் 8 முதல் 10 திட்டமிடப்படாத வணிக விமானங்கள் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

● குவைத் மற்றும் பஹ்ரைன் வான்வெளிகள் மூடப்பட்டே இருக்கின்றன. சவூதி அரேபியாவின் தம்மாம் விமான நிலையத்திலிருந்து இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கு சிறப்பு, திட்டமிடப்படாத வர்த்தக விமானங்கள் இயக்கப்படுகின்றன.

● ஈரானில் வான்வெளி மூடப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்தியக் மக்களின் பயணம் அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் வழியாக எளிதாக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலில் உள்ள வான்வெளி கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இந்திய மக்களின் பயணம் எகிப்து மற்றும் ஜோர்டான் வழியாக எளிதாக்கப்பட்டுள்ளது. ஈராக்கில் வான்வெளி மூடப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்தியக் மக்களின் பயணம் ஜோர்டான் மற்றும் சவூதி அரேபியா வழியாக எளிதாக்கப்பட்டுள்ளது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# மஞ்சள் ரூ.2.30 கோடிக்கு ஏலம்



நாமக்கல், ஏப்.1

நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தி யாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் செவ்வாய்க்கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. இந்த ஏலத்திற்கு நாமகிரிப்பேட்டை, முள்ளுக் குறிச்சி, மெட்டாலா, மங்களபுரம், புதுப் பட்டி, சீராப்பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஆத்தூர், சேலம், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து மஞ்சளை வாங்க வியாபாரிகள் வந்திருந்தனர்.

இதில் விரலி மஞ்சள் 2,077 மூட்டையும், உருண்டை மஞ்சள் 692 மூட்டையும், பனங்காளி 74 முட்டைகள் என மொத்தம் 2,843 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரக மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக ரூ.17,009க்கும், குறைந்த பட்சம் ரூ.13,725க்கும், உருண்டை மஞ்சள் அதிகப்பட்சம் ரூ.13,805க் கும், குறைந்தபட்சம் ரூ.12,282க்கும், பனங்காலி மஞ்சள் அதிகபட்சம் ரூ.33,845க்கும், குறைந்தபட்சம் ரூ.32,447 என மொத்தம் 2,843 மூட்டைகள் ரூ.2.30 கோடிக்கு விற்பனை யானது.



# வைகை அணையின் நீர்மட்டம் சரிவு



தேனி, ஏப்.1

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணையானது மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு முக்கிய நீராதாரமாக விளங்கி வருகிறது. தற்போது அணைக்கு வரும் நீர்வரத்து மிகக் குறைவாக உள்ள நிலையில், வைகை அணையின் நீர்மட்டம் வேகமாக சரிந்து வருகிறது. 71 அடி உயரம் கொண்ட அணையின் நீர்மட்டம் தற்போது 33.79 அடியாகக் குறைந்துள்ளது. அணைக்கு நீர்வரத்து 99 கன அடியாகவும், வெளியேற்றம் 77 கனஅடியாகவும் உள்ளது.

# மிளகாய் சாகுபடியில் பூச்சிக்கொல்லி ஸ்பிரே செய்யும் விவசாயிகள்

புதுக்கோட்டை, ஏப்.1

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதி விவசாய தொழில் சார்ந்த பகுதி ஆகும். இங்கு உள்ள விவசாயிகள் வாழை, தென்னை, கரும்பு, நெல், கடலை, மிளகாய் போன்ற பயிர் செய்து வருகிறார். இப்பகுதியில் எந்த ஆற்று பாசனம் மற்றும் போதிய மழை இல்லை என்றாலும் தமிழ்நாடு அரசு மின்சாரத்துறை விவசாயிகள் பயன்பெறும் வகையில் விலையில்லா மும்முறை மின்சாரம் வழங்கி வருகிறது.

அதனை பயன்படுத்தி கொண்டு ஆழ்துளை கிணற்றில் உதவியாள் விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். பயிர் செய்து உள்ள மிளகாய் செடியில் பூச்சிகளை தாக்கி வருவதால் அதனை ஒழிக்க பூச்சிக்கொல்லி மருந்துகளை விவசாயிகள் ஸ்பிரேயர் செய்து வருகிறார்கள்.



ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# நவீன வேளாண்மையில் முள்ளில்லாத சப்பாத்திக் கள்ளி

முள்ளில்லாத சப்பாத்திக் கள்ளி, சப்பாத்திக் கள்ளி வகைகளில் ஒரு சிறப்புப் பிரிவைச் சேர்ந்த தாவரம். இது 2 முதல் 5 மீட்டர் உயரம் வரையிலும் வளரும். கிளைகள் பெயருககு ஏற்றபடி தட்டையாகவும், சதைப்பற்றாகவும் இருக்கும். இதன் மடல்கள் 20 செ.மீ முதல் 40 செ.மீ வரை நீளமும் 10 செ.மீ முதல் 20 செ.மீ வரை அகலமும் உடையவை. இதன் பூக்கள் பெரிய தாகவும் மஞ்சள், ஆரஞ்சு, ஊதா நிறத்திலும் இருக்கும். பழங்கள் சிவப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் இருக்கும். இந்தப் பழங்களின் உள்ளே பல விதைகள் இருக்கும். இதன் வேர்கள் வறட்சி தாங்கி வளர்வதற்காக பல்வேறு வகைளில் உதவியாக உள்ளன. வேரின் மேற்பரப்பு குறைதல் மற்றும் வேரில் நீர் புகாமை குறைதல் மற்றும் வேரில் நீர் புகாமை குறைதல், நுண்ணிய வேர்கள் நீர் புகா தன்மையுள்ள அடுக்கால் மூடப் பட்டிருத்தல் அல்லது காய்ந்த மண்ணிற்கு நீர் இழப்பைத் தவிர்க்க வேர்கள் விடுதல் அடுக்கில் உதிர்ந்து போதல் என பல வழிகளில் உதவுகிறது.

லேசான மழையால் வழங்கப்படும் சிறிய அளவு தண்ணீரை விரைவாக உறிஞ்சுதல், ஒரு மழை பெய்த சில மணி நேரங் களுக்குள் மடை வேர்கள் உருவாகின்றன. மண் காய்ந்தவுடன் அவை மறைந்து விடுகின்றன அல்லது நீர் வெளியேறும் வேர் மேற்பரப்பில் ஒரு குறைவு ஏற்படுகின்றது. வேரின் அதிக எதிர்மறை ஆற்றல் காரணமாக இலைப்பரப்பில் நீராவி போக்கு குறைகின்றது.

சப்பாத்திக் கள்ளி ஆழமற்ற, சமைப்பற்றுள்ள வேர் அமைப்பைக் கொண்டுள்ளது. இது கிடைமட்டமாகப் பரவுகின்றது. வேர்களின் பரவல், ண்ணின் வகை மற்றும் சாகுபடி மேலாண்மை ஆகியவற்றைப்பொறுத்து அனுகூலமான மண் நிலைகளில் ஒரு ஆணிவேர் உருவாகின்றது. இது மண்ணிற்குள் சுமார் 30 செ.மீ ஊடுருவிச் செல்கிறது. வறண்ட சூழ்நிலைகளில் அதாவது வறண்ட மற்றும் அரை வறண்டு காணப்படும் சூழ்நிலைகளில், ஆணிவேரிலிருந்து சதைப் பற்றுள்ள பக்க வேர்கள் உருவாகி அதிக ஆழத்தில் உள்ள மண் ஈரப்பதத்தை உறிஞ்சுகின்றன.

இருப்பினும் அனைத்து வகையான மண்ணிலும் அதிகப் படியான ஈரம் உறஞ்சும் வேர்கள் மேல் மட்டத்தில் அதிகபட்சம் 30 செ.மீ ஆழத்திற்கு மிகாமல் காணப்படுகின்றது. இந்த வேர்கள் செய்யும் மாயாஜாலத்தால் மட்டுமே கள்ளி வகைகள் செடிப்பகுதியில் அதிகப்படியாக தண்ணீரை சேமித்து வைத்து மிகக் கடுமையான வறட்சியிலும் நீண்ட காலம் செழித்து வளர்கிறது.

சப்பாத்திக் கள்ளிச் செடிகள் வறட்சி தாங்க அதன் அதன் மடல்களும் ஒரு காரணம். அதிலுள்ள தண்ணீர் சேமிப்பு நீர் ஆவியாதலைக் குறைத்திடம் வெளிப்புறத் தோல் அமைப்பு மற்றுமொரு காரணம். வசந்த காலத்தின் பிற்பகுதியிலிருந்து கோடையின் ஆரம்பம் வரை மிக உயர்ந்த வளர்ச்சி அடைகிறது.

கோடை மழைகள் உள்ள பகுதிகளில் புதிதாக நடப்பட்டவை பின்னர் கிடைக்கும் மழையால் பயனடைகின்றன. ஒவ்வொரு செடிக்கும் வாரம் ஒரு முறையேனும் 10 லிட்டர் தண்ணீர் பாசனம் கிடைக்கச் செய்தால் வேர் வளர்ச்சி மேம்படும். ஆனால் இளம் செடிகளுக்கு அதிக நீர் பாய்ச்சாமால் கவனமாக இருக்க வேண்டும்.

தீவனத் தட்டுப்பாடு நிறைந்த வறண்ட காலங்களில் கால்நடை களுக்கு நம்மால் சத்து மிகுந்த தீவனம் கொடுக்க பெரும் பணச் செலவு செய்ய நேரிடும். நமது நிலத்தின் வேலியிலும் தேவைப் படாது கழித்து ஒதுக்கப்பட்ட நிலங்களில் இவ்வகை முள் இல்லா சப்பாத்திக் கள்ளிகளை நடவு செய்து வைத்தால் மிக விரைவாக பல்கிப் பெருகி இருக்கும். கால்நடைகளுக்கான தீவனப் பற்றாக் குறை ஏற்படும் காலங்களில் இம்மடல்களை எளிதாக சேகரித்து சிறிது சிறிதாக நறுக்கிக் கொடுத்தால், அனைத்துக் கால்நடை களும் விரும்பி உண்ணும். ஒரு சில கால்நடைகள் துவக்கத்தில் உண்ண மறுக்கும். அவற்றுக்கு மட்டும் சிறிதளவு அடர் தீவனத்துடனோ கலந்து கொடுத்தால் உண்டு பழகிவிடும். பின்னர் இதன் சுவையால் ஈர்க்கப்பட்டு தனியாகவே உண்ணப் பழகிவிடும்.

தகவல் : *T.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலை.*

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**